# சம்மாந்துறை பிரதேச சபையின் 08 வது பொது கூட்டறிக்கை 2018.10.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 08 ஆவது அமர்வு 2018.10.09 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப். எம் ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 08 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அமீர் அலி நூலகம் ஆரம்பித்து 09.10.2018 ஆம் திகதி இன்று 35 வருடங்களாகின்றது. காலையில் அங்கு வருபவர்களுக்கு சிறு சிற்றூண்டி வழங்கி அவர்களுக்கு அவை நினைவூட்டப்படும்.

கௌரவ உறுப்பினர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வது அடுத்த வருடத்திற்குள் அமீர் அலி பொது நூலகத்தில் இட வசதி போதாமல் உள்ளது. அதற்குள் Auditorium, Study Sender போன்ற அபிவிருத்தி வசதிகளை செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தவனாக,

சம்மாந்துறை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களினால் 16 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு சமூகமளிக்கும் அங்கத்தவர்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்சியின் சார்பாக ஒரு அங்கத்தவர் என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் அவர் இல்லாத போது கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் கௌரவ உப தவிசாளர் ஜெயச்சந்திரன் அவர்களும் அவர் இல்லாத போது கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்களும் இவர் இல்லாத போது கௌரவ உறுப்பினர் கோவிந்த சாமி அவர்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சகல உறுப்பினர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஆனால் இவை தேசிய ரீதியில் முடிவுகள் எடுக்கப்பட்டது. இதனை ஆட்சேபித்து மனு அனுப்பியிருக்கின்றேன். ஏனென்றால் நமது பிரதேசத்திற்குள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறும் போது அபிவிருத்தி தொடர்பான விடயங்ககளின் போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட சகல உறுப்பினர்களும் இருப்பதுதான் உகந்தது என்பது எனது கருத்து. இங்கு 20 பேர் என்றால் கொழும்பு போன்ற இடங்களில் 100 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இதனால் ஒரு நடைமுறைச் சிக்கல் உள்ளது. ஆனால் அதை விட இன்று ஒவ்வொரு சபையிலும் 20 வீதம் பெண் பிரதிநிதி இருக்க வேண்டும் என்று அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. இதற்குப் புறம்பாக பெண் பிரதிநிதிகள் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற வரையறையும் செய்யவில்லை. அதனையும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அக் கூட்டத்தில் சபையின் சார்பில் சில விடயங்களை முன்வைக்க உள்ளேன். இதற்கு அப்பால் உங்களுக்கும் சபையின் ஏதாவது விடயங்கள் இருந்தால் பின்னர் நீங்கள் முன்மொழியலாம்.

திண்மக்கழிவு இந் நாட்டில் ஒரு பாரிய சவாலாக உள்ளது. இது தொடர்பாக ஆர்பாட்டமும் செய்கின்றனர். இது நமக்கும் வரலாம். நாம் அட்டாளைச் சேனையில் கொடுத்துவந்தோம். அங்கு தீப் பிடித்தவுடன் கழிவுகளை கொட்டுவதற்கு இடம் இல்லை. சில இடங்களில் கொட்டினாலும் அங்கு யானையின் பிரச்சினை பாரிய சவாலாக உள்ளது. நமது சபைக்குச் சொந்தமான Compost Yard க்கும் இரண்டு தடவை யானை வந்து சுவரை உடைத்துள்ளது.

இந்த ஊரில் சேர்க்கப்படும் கழிவுகளைக் கொட்டுவதற்கு இடங்கள் இல்லாமல் போவதற்கு முன் அதற்கான இடங்கள் இணங்காணப்பட வேண்டும். அதில் திண்மக்கழிவு மட்டுமல்ல Toilet pit இல் இருந்து வரும் கழிவுகளையும் Process செய்வதற்கு ஒரு இடம் தேவைப்படுகின்றது.

நமது ஊரில் பெரும்பாலான கட்டடங்கள் சட்டவிரோதமான கட்டடங்களாக காணப்படுகின்றது. சில கட்டடங்கள் ஆபத்தான கட்டடமாக காணப்படுகின்றது. 2½ பேச்சில் மூன்று மாடி கட்டுவதற்கு ஒரு விண்ணப்பப்படிவம் வந்தது. ஆனால் UDA வின் சட்டத்தில் 2½ பேச்சில் முதலாவது மாடி மட்டும்தான் கட்ட முடியும். அதுமட்டுமல்ல அதன் உயரம் 21 அடிக்கு மேல் செல்லக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அனுமதி இல்லாமல் கட்டினாலும் அடுத்தவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கட்டடமாகவே காணப்படுகின்றது. இவை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

சட்டவிரோத கட்டடம் பாரிய சவாலாக உள்ளது. இக் கட்டடங்களை வழக்கு மூலமாவது தடுக்க வேண்டும். அதற்குரிய நீர், மின் இணைப்பு எந்த அனுமதியும் இல்லாமல் கிராம நிலதாரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றது. எனவே இவைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

விவசாய நிலங்கள் அல்லது நீர் வடியும் நிலங்கள் சட்ட விரோதமாக மன் போட்டு நிரப்பப்படுகின்றது. உதாரணமாக அலவக்கரை பிரதேசத்தைப் பார்க்கலாம். அவ்வாறு நடப்பதானால் வடிகான் அமைப்புக்கள் சரியான முறையில் இடம்பெற வேண்டும். இதனை பராமரிக்கும் கடமை கௌரவ உறுப்பினர்களுக்குரியது.

CEB, Water Supply, Telecom போன்ற நிறுவனத்தினால் வீதிகளில் செய்யப்படும் வேலைகள் தொடர்பாக சபையின் எந்தத் தொடர்பும் இல்லாமல் அவர்களது வேலைகளைச் செய்கின்றனர். நாம் வீதிகள் போடும்போது வீதியின் நடுவில் தூன் அல்லது பைப் போடப்பட்டிருக்கும். அப்போது நமக்கு வீதி போடுவதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றது. அவர்கள் சபையுடன் தொடர்பு கொண்டு அவர்களது வேலைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கிராம நிலதாரி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அதிகாரிகள் சபையின் நடவடிக்கைகளுக்கு பராமரிப்பு வேலைகளில் நமக்கு உதவ வேண்டும் என்ற முன்மொழிவு. அதாவது சரீர உதவியல்ல சபைக்கு அறிவித்தல்களைத் தருவதுடன் சட்டவிரோதமான கட்டடங்களைக் கண்கானிப்பதற்கும் உதவ வேண்டும்.

அவசர காலத்தில் வெள்ளம் அல்லது புயல் அல்லது யானைத் தாக்கத்தின் போது பாதிப்படையும் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல். உதாரணமாக ஒரு மதில் உடைந்து விட்டால் அரசாங்கத்தினால் செய்து முடிப்பதற்கு 4 அல்லது 5 மாதம் செல்லும். எனவே அதனை சபையினூடாக அந்தத் தொகைக்குள் உடனடியாக நிவாரணம் வழங்கிய பின்னர் அரசாங்கம் மூலமாக சபை நிதியினை நிவர்த்தி செய்தல் போன்ற திட்டத்தை உருவாக்குதல்.

வடிகான், வாய்கால்களுக்குரிய றிசவேசன் ஒழுங்குபடுத்தி பிரதேச சபை, பிரதேச செயலகம், நீர்பாசனத் திணைக்களம் மூன்றும் இணைந்து அவ்விடங்களில் மரங்களை நடுகையிட்டு மக்கள் பாவனைக்கு எடுக்கக்கூடியதாக ஒரு திட்டத்தை உருவாக்குதல்.

இம் முன் மொழிவுகளை நமது சபையின் சார்பாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க உள்ளேன். இதற்கு மேலாக உங்களது முன் மொழிவுகள் இருக்குமானால் எழுத்து மூலம் அல்லது சபையிலும் தெரிவிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இயற்கை அனர்த்தம் ஏற்படும் போது அரசாங்கத்தின் இளப்பீடுகள் தொடர்பாக பிரதேச சபையினால் செய்வது ஆரோக்கியமான யோசனையாக தெரியவில்லை. அதாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் Disaster Management என்று மாவட்ட செயலாளர்களால் பிரதேச செயலகங்களில் அவசர காலங்களில் அத்தியவசிய தேவையை பூர்தி செய்வதற்காகத்தான் உருவாக்கப்பட்டுள்ளது. இது இவ்வாறு இருக்கும் போது நாங்கள் எங்களது சபை பணத்தின் மூலம் செய்வது ஒரு ஆரோக்கியமான விடயமல்ல என நான் கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது சபையின் பணமல்ல. பிரதேச செயலகத்தில் Disaster Management Unit இருக்கின்றது. அவர்களிடம் ஆளணி இல்லை. அதாவது மதில் உடைந்தால் அதற்கு 50,000 ரூபா நஸ்டஈடு என்றால் அது நமது சபையிடம் வரும். இது சபைக்காசல்ல நாம் முன்கூட்டி அவ்விடயத்தை செய்து கொடுக்கின்றோம். அதனுடைய இறுதிக் கொடுப்பனவு நமது சபைக்குத்தான் வரும். இம் முன்மொழிவைக் கொடுப்பதற்குக் காரணம். மக்களின் முதல் பிரதிநிதி அந்தந்த வட்டார

உறுப்பினர்கள்தான். அவருக்கும் அம்மக்களுக்கும் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதாகும். உதாரணமாக ஒரு வீட்டின் ஜன்னல் உடைந்து விட்டால் நமது சபை ஊழியர்கள் மூலம் உடனடியாக செய்து அதற்குரிய Bill பிரதேச செயலகத்தில் கொடுத்து அதன் மூலம் வரும் பணம் சபைக்கு வரும். இது சட்டத்தின்படி சபையினால் செய்யப்பட வேண்டிய வேலைகள். வெவ்வேறு சட்டங்களினாலும் வெவ்வேறு அமைப்புக்களினாலும் சட்டங்கள் எடுக்கப்பட்டுள்ளது. அதனை மறைமுகமாக நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் முக்கியமாக கவனத்தில் கெள்ளப்பட வேண்டிய விடயம் தென்னைமரம் 2010 ஆம் ஆண்டு 125000 ருபா அதன் வலுவேசன். 2018 அம் ஆண்டு அதற்குரிய தொகை தெரியாது. ஆனால் தென்னை மரங்களை அழித்துவிட்டுச் செல்கின்றது. அதற்கு இன்சுரன்ஸ் இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. அது நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. மிகவும் சிரமத்திற்கு மத்தியில் 5 வருடங்களாக மரங்களை வழர்க்கின்றோம். ஆனால் யானைகள் வந்து அந்தக்காலையையே அழித்துவிட்டு செல்கின்றது. இதற்கு எந்த நிவாரணமும் கிடைப்பதில்லை.

மதில் உடைந்தால் அதற்கு நிவாரணம் இருக்கின்றது. இது பாரிய சவாலாக உள்ளது. உங்களது முன்மொழிவை நாங்கள் வரவேற்கின்றோம். நமது ஊரில் ஏதாவது இயற்கை அனர்த்தம் ஏற்பட்டால் மக்கள் நம்மிடம்தான் முதல் வருவார்கள். எனவே சட்டத்தைப் பயன்படுத்தி நமது மக்களுக்கு முடியுமானவரை உதவிகளைச் செய்ய வேண்டும்.

அனுமதியற்ற பிழையான கட்டடங்களை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் அறிவித்தல்கள் விடுத்து அவைகளை அகற்ற வேண்டும். அத்தோடு அனேகமான வீடுகள் மின் கம்பிகளுக்குப் பக்கத்தில் கட்டப்பட்டுள்ளது. அவைகள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. வீட்டுக்கு மேலால் செல்கின்ற மின் கம்பிகளுக்கு பைப் போட்டுக் கொடுக்க வேண்டாம் என்று நாம் ஒரு வலுவான தீர்மானம் எடுத்தோம். ஆனால் அதற்குப் பின்னரும் மீண்டும் மீண்டும் மின் கம்பிக்கு கீழ் கட்டடம் கட்டப்படுகின்றது. அவைகளை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு நாம் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை எல்லைக்குட்பட்ட இடங்களான பாலக்கர ஆற்றுக்குப் பக்கத்தில் உள்ள APC காணி காரைதீவு பிரதேசத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிகள் சம்மாந்துறை பிரதேசத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

சிறிய வீதிகளில் வாகனங்கள் இரண்டு பக்கங்களிலும் வைக்கின்றனர். இதனால் போக்குவரத்து மிகவும் சிரமமாக உள்ளது. மருதமுனையில் ஒற்றை நாட்களில் ஒரு பக்கமும் இரட்டை நாட்களில் ஒருபக்கமும் வாகனங்களை நிறுத்த வேண்டும் என்று கடந்த வாரம் பிரேரனைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இதே போல் நமது ஊரிலும் செயற்படுத்துவோமேயானால் போக்குவரத்துக்கள் மிகவும் இலகுவாக்கப்படுவதுடன் பிரச்சினைகளையும் குறைத்துக்கொள்ளலாம்.

வீதியில் கல் மண் கொட்டுபவர்கள் குறிப்பிட்ட தினங்களில் அனுமதி பெற்று செய்தால் சிறப்பாக இருக்கும். சிலர் செங்கற்களை வீதிகளில் மாதக்கனக்கில் அடுக்கி வைக்கின்றனர் இதனால் போக்கு வரத்து தடைப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் வீடு உடைத்த கற்களையும் வீதிகளிலேயே போடுகின்றனர். இவைகளுக்கு சபையில் தீர்மானம் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவசரகால நிலமையின் போது சபையினால் நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்ல விடயம். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். அதே வேளை இந்த நிகழ்ச்சித்திட்டத்தினால் சபையும் சபை உறுப்பினர்களும் சங்கடத்துக்குள்ளாகின்ற சூழ்நிலையும்

ஏற்படும். விசேடமாக சிறிய மழை பெய்தாலும். வீட்டில் வெள்ளம், கூரை உடைந்து விட்டது, வடிகான் பிரச்சினை போன்ற பிரச்சினைகளைக் கூறிக் கொண்டு மக்கள் எம்மிடம் வந்தால் நாம் எவ்வாறு இவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பது? இதற்கு மதிப்பீடு என்ன? எந்த அடிப்படையில் இவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது? அதனை நாம் எவ்வாறு மீளப் பெற்றுக் கொள்வது? என்பதற்கான ஒரு தெளிவான விளக்கம் இருந்தால் சிறப்பாக இருக்கும் என நன் கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இம் முன்மொழிவுகளை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் அரசாங்கத்தில் என்னென்ன விடையங்களுக்கு எவ்வாறு கொடுக்க வேண்டும் என்ற முறை உள்ளது. அதற்கு அப்பால் நாம் போக முடியாது. இந்த நடவடிக்கைகளை சில எல்லை வரையறைக்குள் கட்டுப்படுத்த வேண்டும். உதாரணமாக வீடு மனை என்றால் அதற்கு 50,000 ரூபா என்றால் அதற்குரிய மதிப்பீட்டினை செய்து வழங்குவது பிரதேச செயலகம். அவைகள் ஒழுங்கான முறையில் நடைபெறும். அவை மக்களிடம் போய் சேரும்போது அதில் நாமும் ஒரு பங்காளியாக மாறுவதுதான் எனது திட்டம். அந்த நடவடிக்கைகளில் பிரதேச சபையும் ஒரு அங்கம் என்பதை உருவாக்குவதுதான் இதன் நோக்கும்.

சகோதர நகர முன்மொழிவு நாம் ஜப்பான் நகரத்திற்கும் சீனா நகரத்திற்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்தியிருந்தோம். யூனான் நகரத்தில் இருந்து டொம் ஹைன் வரை. இது தொடர்பான விடயங்களும் அதற்கு நான் இறுதியாக அனுப்பிய Email இற்கான பதிலும் இணைக்கப்பட்டு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நான் சீனா தூதுவருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளேன். 06 மாத காலத்திற்குள் ஒரு சந்தோசமான செய்தி வரலாம். அந்தப் பிரதேசத்தில் சிறுபான்மையின மக்களும் வாழ்கின்றனர். பள்ளிவாசலும் உள்ளது. இது கலப்பு நகரமாகும். நீங்கள் அந்நகரத்தை கூகுளில் பார்க்கலாம். இதனை உங்களுக்கு அறிவித்தவனாக,

வாசிப்பு மாத நிகழ்வுகள் 01.10.2018 ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகும் அதன் அறிவுப்புகள் உங்களிடம் வந்து சேரும். அன்றய தினம் அமீர் அலி நூலகத்தில் உள்ள முக்கியமான புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்படும். அத்தோடு மாணவர்களுக்கான சித்திரப் போட்டியும் ஆரம்பிக்கப்படும். அதில் நீங்கள் அனைவரும் உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது பங்கு பற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அதன் இறுதி விழா அப்துல் மஜீட் மண்டபத்தில் 29 ஆம் திகதி நடாத்த உத்தேசித்துள்ளோம். அதனை நாங்கள் உங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்போம்.

வருடா வருடம் ஊழியர்கள் இடமாற்றப்படுவது உங்களுக்கு தெரிந்த விடயம் அந்த வகையில் இந்த வருடம் 03 அபிவிருத்தி உத்தியோகத்தரும் 02 முகாமைத்துவ உதவியாளரும் 02 தொழில் நுட்ப உத்தியோகத்தரும் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இதனை ஆட்சேபித்து நான் பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) அவர்களை சந்தித்து கூறினேன். சபை என்பது ஒரு திணைக்களமல்ல இதில் தேர்ச்சி பெற்றவர்கள் மாற்றப்படும் போது பாரிய சிக்கல்கள் உருவாகும். அதாவது சபையின் நடவடிக்கைகள் தாமதமாகவே இடம்பெறும். உதாரணமாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் இரண்டு பேரும் இடமாற்றம் செய்யப்பட்டால் அபிவிருத்தி வேலைகளில் தடை ஏற்படும். புதிதாக வருபவர் அதனை பழகி எடுக்கும் போது வேலைகள் காலதாமதமாகவே நிறைவேற்றப்படும். அவர்கள் பிரதேச சபையில் கடமை புரிந்தவர்கள் என்றால் இலகுவாக இருக்கும். ஆனால் இங்கு வருபவர்கள் வேறு திணைக்களங்களில் கடமை புரிந்தவர்கள். இதனை எடுத்துக்காட்டி நான் எழுத்து மூலம் 02 அபிவிருத்தி உத்தியோகத்தரையும் 02 தொழில் நுட்ப உத்தியோகத்தரையும் ஒரு வருடத்திற்கு பிற்போடு மாறு கூறியுள்ளேன்.

உங்களுக்குத் தெரியும் உள்ளூராட்சி ஆணையாளர் மாற்றப்பட்டுள்ளார். அவருக்குப்பதிலாக Mr. மணிவண்னன் நியமிக்கப்பட்டுள்ளார் அவர் மட்டக்களப்பு மாநகர ஆணையாளராக இருந்தவர். அவர் திங்கட் கிழமை கடமையேற்றிருக்கின்றார். அந்த மாற்றங்கள் நமது வேலைகளில் சில தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனை உங்களுக்கு அறியத்தர வேண்டும் என்பது எனது விருப்பம்.

**சொத்தக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல்** தொடர்பான விண்ணப்பம் உங்கள் அனைவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதனை பூரணப்படுத்தி கொடுங்கள். இது பதவி ஏற்ற நாளில் இருந்து உள்ள சொத்துக்கள் தொடர்பான விபரங்கள். அதனை விரைவாகக் கொடுங்கள். இல்லாவிட்டால் உங்களது கொடுப்பணவு இடைநிறுத்தப்படும். அதைத்தான் அவர்களால் செய்ய முடியும்.

**Road Inventory** 30 ஆம் திகதி முடிவடைந்துள்ளது. அனைவரும் முடித்திருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். முடிக்காவிட்டால் இந்தக் கிழமைக்குள் எடுத்துத்தாருங்கள். பெயர்களில் யோசித்துக் கொண்டிருக்காமல் உங்களுக்கு வருவதைத் தாருங்கள். பின்னர் ஊர் பெரியார்களை வைத்து குழு அமைத்து முடிவெடுக்கலாம். தயவு செய்து உங்களது வட்டாரத்திற்குரிய அடிப்டை வேலை. அதற்கான பங்களிப்பினைச் செய்யுங்கள். 15 ஆம் திகதிக்குள் தந்து முடிக்க வேண்டும்.

**திறந்த வெளி பொதுச்சந்தை** நடவடிக்கைகள் சபைக்கு நாளாந்தம் விமர்சனத்தை கொண்டு வருகின்ற விடையமாக இருக்கின்றது. மூவர் அடங்கிய குழுவின் அறிக்கைக்மைவாக கீழ்வரும் நிபந்தனைகளுடன் குத்தகை வழங்குவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

01. அங்காடி வியாபார நிலையம் ஒன்றுக்கு ரூபா - 150.00
02. வெளி இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட 50 Kg எடை உடைய மூடை உருவிலான பொருட்களுக்கு மூடை ஒன்றிற்கு ரூபா - 150.00 (மரக்கறி , கிழங்கு, தேங்காய்)
03. ஏனைய சகல பொருட்களையும் கொண்ட ஒரு மூடைக்கு (துணி மற்றும் ஆடை வகைகள் போன்றவை உட்பட) ரூபா - 100.00
04. நடமாடும் உணவுப்பண்ட வியாபாரி ஒருவருக்கு ரூபா – 50.00
05. 40 Kg நிறையுடைய மீன் பெட்டி ஒன்றுக்கு ரூபா – 150.00 (வாகனங்களில் கொண்டுவரும் மீன்களின் அளவு பெட்டியின் அளவினை வைத்துக் கணிப்பிப்படும்)
06. லொறி, கெண்டர் மற்றும் வேன் போன்ற வாகனங்களின் மூலம் வீதிகளில் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் லொறி - 200.00/-, வேன் - 150.00/-, கெண்டர் - 200.00/-
07. சீமெந்து, கம்பி, சீனி, அலுமாரி போன்ற பொருட்களை மொத்தமாக பிற இடங்களிலிருந்து கொண்டுவந்து விற்பனை செய்யும் லொறி, வேன் போன்றவற்றிற்கு ரூபா - 250.00

இதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் இதனை ஒழுங்கு படுத்துவதற்கு உங்கள் அபிப்பிராயங்களை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வரி சம்பந்தமான விடயத்தில், தேசிய லொத்தர் சீட்டு விற்கப்படுவதற்கு வரி தொடர்பான சரியான தெளிவில்லாத காரணத்தினால், அது பற்றிய தெளிவினை கூறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தேசிய லொத்தர் சபை விற்பனை மூலமாக இந்த நாட்டின் அபிவிருத்திக்கு பணம் சேர்க்கப்படுகின்றது. அது அரசினால் நடாத்தப்படும் ஒரு வியாபாரம் அதற்கு இன்னொரு அரச நிறுவனம் வரி விரிக்கலாமா? என்ற கேள்விக்குறி இருக்கின்றது. நிச்சயமாக அதனை நான் தெளிவு படுத்துகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்தக் கட்டணங்கள் பெருநாள் காலங்களில் அப்துல் மஜீட் மண்டபத்தில் வியாபாரம் செய்பவர்களிடம் அதிகமான கட்டணம் அறவிடப்படுவதாக கூறுகின்றனர் மேலும் கட்டணங்கள் அறவிடும் போது இதன் தெளிவான விளக்கத்தினை துண்டுப்பிரசுரங்கள் மூலம் அறிவித்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். இதில் அனைவரும் ஆலோசித்து கூட்ட முடியுமானவற்றுக்கு கூட்டியும் குறைக்க முடியுமானவற்றுக்கு குறைக்கவும் செய்யலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தை மூவர் கொண்ட குழுவாக இருந்து 02 நாட்களுக்குள் முடித்துத் தாருங்கள். கௌரவ உப தவிசாளர் அவர்களே நீங்கள் இன்னும் இரண்டு கௌரவ உறுப்பினர்களைச் சேர்த்து அதற்கான முடிவை பெற்றுக் கொள்ளுங்கள்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொதுச் சந்தை விடயமாக அங்காடி வியாபாரிகள் அதாவது வெளியூர்களில் இந்து, கொண்டு வருகின்ற மீன் வியாபாரிகளின் கவலை நிலை என்னவென்றால் ஞாயிற்றுக் கிழமை 12 மணி அளவில் மீன் வியாபாரி ஒருவர் அறியாத்தனமாக வீதி ஓரத்தில் மீனை கொட்டியிக்கின்றார். காசு அறவிட வந்தவர் அதனை அள்ளுமாறும் இல்லாவிடில் அதற்கான பணத்தை தருமாறும் கூறியிருக்கின்றார். அதற்கு மீன் வியாபாரி நான் இப்போதுதான் மீன் கொண்டு வந்துள்ளேன். இன்னும் விற்கவில்லை. என்னிடம் தேனீர் குடிப்பதற்கும் காசில்லை கொஞ்சம் பொறுங்கள் என்று கூறியவுடன் காசு வாங்க வந்தவர் அவருக்கு அடித்துவிட்டு மீனை அள்ளி வீசி சேதப்படுத்தி அட்டகாசம் காட்டியுள்ளார்.

அந்த நேரம் அம் மீன் வியாபாரி இந்த பிரதேச சபை ஊழியர்கள் செய்யும் அட்டகாசம் இது என்று கூறினார். நான் அந்த இடத்திற்குச் சென்றதனால் இவர் பிரதேச சபை ஊழியர் இல்லை என்பதை விளங்கிக் கொண்டேன். நான் அவர் பிரதேச சபை ஊழியர் இல்லை என்று கூறியும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. காசு அறவீடு செய்பவர் நமது பிரதேச சபைக்குட்பட்டவராக இருந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதனை கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் ஆலோசகராக இருந்து செயற்படுங்கள். பெருநாள் காலங்களில் இலவசமாக கொடுப்பதென்றாலும் நாம் தீர்மானம் எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்களுக்கு அதிகமான அனுபவம் உள்ளது. அத்தோடு அவருடன் இன்னும் 02 உறுப்பினர்களை இணைத்து ஒரு வாரம் கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அங்காடி வியாபாரி வரி சம்பந்தமான விடயம் தொடர்பாக, வியாபாரம் செய்ய வருபவரிடம் வரியைக் குறைப்பதா? அதிகரிப்பதா? என்பது. ஆனால் இங்கிருக்கின்ற வியாபாரிகள் அவர்களுடைய வியாபாரத்திற்குத் தேவையான பொருட்களை வெளியூரிற்கு சென்று கொள்வனவு செய்யப்படுகின்ற போது, உதாரணமாக எமது பொதுச் சந்தையில் இருக்கின்ற மரக்கறி வியாபாரிகள் தேங்காய் வாழைக்காய் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சியம்பலாண்டுவை, மொனறாக்கல போன்ற வாராந்த சந்தைக்கு போனால் எந்தவிதமான தடையும் இல்லாமல் வாகனத்தை அந்த எல்லைக்குள் நிறுத்தினாலே 500 ரூபா டிகட் கொடுக்கப்படும். அங்கு எந்தவிதமான காரணங்களும் கூற முடியாது. அதனை ஒரு கட்டுப்பாட்டுடன் செய்கின்றனர். அதே போல் இன்னொருவரிடம் பலாத்காரமாக பறித்தெடுக்கும் தேவையும் இல்லை. சரியான தொழில் நுட்பத்துடன் செய்து வருகின்றனர்.

அதே போல் இது எமக்கு கிடைக்கின்ற வருமானம். விசேட தினங்களில் கொண்டு வருகின்ற வியாபாரங்களுக்கு அதற்கு குறிப்பிட்ட தொகையை நிர்ணயிக்க வேண்டும். அங்காடி வியாபாரிகள் என்ற ரீதியில் சிறிய பொருட்கள் உதாரணமாக நாவல் பழம் விற்க வருபவரிடம் 500 அல்லது 200 ரூபா அறவிட முடியாது. அவ்வாறான வியாபாரங்களுக்கு ஏற்ற வகையில் கட்டணங்களை அறவிட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நஜீம், கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் றியாஸ் நீங்கள் மூன்று பேரும் இணைந்து திங்கட் கிழமைக்கு இடையில் அதனைத் தீர்மானித்துத் தாருங்கள்.

பெண் உறுப்பினர்களுக்கு 2018 ஆம் ஆண்டு வரவு செவுத் திட்டத்தில் பெண்களை ஊக்குவிற்பதற்காக 5 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெண் உறுப்பினர்களும் ஒரு இலட்சம் வழங்கப்படும். ஒரு வாரத்திற்குள் மதிப்பீட்டறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

**தீர்மானம் 02**
2018 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் பெண்கள் ஊக்குவிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 05 இலட்சம் ரூபாவுக்கான வேலைத்திட்டங்களை கௌரவ உறுப்பினர் அவர்களிடம் இருந்து முன்மொழிவுளை பெற்று செயற்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம். சித்தி நிலுவ்பா |

**தீர்மானம் 03**
திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் அனைத்திற்கும் GPS தொழில்நுட்ப வசதி செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம். முஸம்மில் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இன்று எந்த வாகனம் எவ்விடத்தில் உள்ளது என்பது தெரியாது எனவே, GPS இருந்தால் யாரும் பொய் சொல்ல முடியாது. நாமே எந்த வாகனம் எந்த இடத்தில் உள்ளது என்பதனை தெரிந்து கொள்ளலாம்.

உக்கக்கூடிய கழிவுகள், உக்காத கழிவுகள் தரம் பிரித்து வழங்குவதற்காக ஒரு பேக் 39 ரூபா வீதம் கௌ்வனவு செய்யப்பட்டுள்ளது. அவைகளை உக்கக்கூடியதற்கு 02 பேக், உக்காதவைக்கு 02 பேக் வீதம் 100 ரூபாவிற்கு 04 பேக் மக்களுக்கு ஊக்குவிப்பாக மாணிய அடிப்படையில் வழங்க வேண்டும்.

**தீர்மானம் 04**
திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் 2018 இன் கீழ் குப்பைகளை தரம் பிரித்து பெற்றுக் கொள்வதற்காக இரண்டு நிறத்திலான உரப்பைகள் ஒரு பேக் 39 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதனை மக்களுக்கு ஊக்குவிப்பாக மாணிய அடிப்படையில் 4 பேக் 100 ரூபா வீதம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**தீர்மானம் 05**
புளக் ஜே கிழக்கு - 01 இல் புதிதாக ‘அல் ஹுதா’ சனசமூக நிலயத்தினை பதிவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது சபைக்கு ஆளணி எடுப்பதில் பல சிக்கல்கள் உள்ளது. எனவே சனசமூக நிலயங்கள் கொந்தராத்து வேலைக்கு மட்டுமல்லாமல் அந்தந்த வட்டாரத்திற்குரிய அபிவிருத்தி வேலைகளில் பங்கெடுப்பதற்கு சபையினால் பிரதேச சபை சட்டத்தின் 19 வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய ஒவ்வொரு மாதமும் சனசமூக நிலயங்களுக்கு ஊக்குவிப்பு தொகை கொடுக்கலாம். அதன் மூலமாக நாம் ஒவ்வொரு பிரதேசமாக கொடுத்து அந்த பிரதேசத்தில் உள்ள பராமரிப்பு வேலைககள் அதாவது கான் துப்பரவு செய்வது சபைக்குரிய வாய்கால்களை துப்பரவு செய்தல் போன்ற வேலைகளை செய்து பராமரிப்பதற்கு மாதாந்தம் ஒரு தொகை வழங்குவதால் நாம் நிரந்தர ஊழியர்களுக்கு அங்கீகாரம் பெறவேண்டி ஏற்படாது.

உதாரணமாக அல்ஹுதா சனசமூக நிலயத்திற்கு 01 அல்லது 02 GS பிரிவினைக் கொடுத்து அதற்குள் இருக்கின்ற சிறிய வேலைகள் அதாவது கான் துப்பரவு செய்தல் போன்ற வேலைகளுக்கு 03 ஊழியர்களுக்கு உத்தேசமாக மாதம் 50,000 ரூபா கொடுத்தால் அவர்கள் அதற்குப் பொறுப்பாக இருப்பார்கள். அதற்குரிய வாகன வசதிகள் நாம் செய்து கொடுக்கலாம். இவ்வாறு செய்யும் போது சனசமூக நிலயங்கள் ஒரு வலுவுள்ள நிலயமாக மாறும் அதற்கு சட்டத்தில் இடம் உள்ளது. இதனால் ஒவ்வொரு வட்டாரத்திலும் அரசியலுக்கு அப்பால் ஓர் உறுதியான அமைப்பு உருவாகும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இத்திட்டம் நல்ல விடயம் அதனை வரவேற்கின்றேன். 51 கிராம சேவகர் பிரிவு உள்ளது ஒவ்வொரு சனசமூக நிலயங்களுக்கும் 50,000 ரூபா வீதம் கொடுத்தால் 25 இலட்சம் தேவைப்படும் அந் நிதியை வழங்குவதற்கு எமது சபையில் நிதி உள்ளதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆம் அதற்கு இருக்கின்றது. நமது சட்டத்தில் 19 வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நம்மிடம் 15 சனசமூக நிலயங்கள் உள்ளது. ஆனால் 51 சன சமூக நிலயங்களை உருவாக்கினால் நமது சுமை குறையும். மக்கள் மயப்படுத்தப்பட்ட சபையாக நமது சபை மாறும். நாம் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு சனசமூக நிலயத்திற்கும் அந்தந்த பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொள்ள முடியும். சில பிரதேசங்களில் அவ்வாறான தேவை வராது. எந்த சனசமூக நிலயம் சிறப்பாக இயங்குகின்றதோ அதற்கு குறிப்பிட்ட தொகையை வழங்கினால் வேலை செய்வதற்கு சனசமூக நிலயங்களுக்குள் ஒரு போட்டி நிலை உருவாகி சிறப்பாக செயற்படுவார்கள்.

Financial Management என்பது உணர்ச்சிகளுக்கும் அரசியலுக்கும் அப்பால் செய்வது. இது பாரபட்சம் இல்லாமல் ஒழுங்காக வரும்போது அதனை செய்யலாம். அதற்குரிய பணத்தை தேடுவது எனது பொறுப்பு நீங்கள் திட்டங்களுக்கு உடன் பட்டால் அதனைச் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சில இடங்களில் திண்மக்கழிவகற்றல் நடைமுறையில் இல்லை. சில பகுதிகளில் ஊழியர்களை வைத்து நடைமுறைப்படுத்துகின்றோம். அதே நேரம் இவர்களுக்கும் 50,000 ரூபா கொடுப்பது எவ்வாறு சாத்தியப்படும். நாம் செலவு செய்வது கஸ்டப்பிரதேசங்களில் திடீர் அனர்த்தம் ஏற்படும் போதே இதனைச் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எங்கு தேவை இருக்கின்றதோ அங்குதான் வழங்கப்படும். எல்லோருக்குமல்ல. இவைகளை கண்கானிப்பது கொளரவ உறுப்பினர்களின் பொறுப்பாகும். உதாரணமாக சுவானியார் ஆரப்பத்தை அல்லது ஸம் ஸம் ஆரப்பத்தையை எடுத்துக் கொண்டால் மழை பெய்தவுடன் பார்த்தால் அதற்குள் வரும் கழிவுகள் விளங்கும். இதனை நமது வேலைத் தொழிலாளிகளைக் கொண்டு துப்பரவு செய்ய முடியாது. காரணம் நமக்கு இருக்கின்ற ஆளணி போதாது.

எனவே, அவைகளை சனசமூக நிலயத்திற்கு கொடுத்தால் அவர்கள் அதனை செய்யலாம். 50,000 ரூபா என்பது மாதத்திற்குரியது. இதன் விளக்கம் என்னவென்றால் உடனடி நிவாரணம் அவ்விடத்தில் இருப்பவர்களால் வழங்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, திடீர் என்று வெள்ளம் வரும்போது ஒவ்வொரு சந்தியிலும் அடைக்கின்ற போது நாம் பாத்திருக்கின்றோம். சுவானியார் ஆரப்பத்தை என்பது நேராக போவதில்லை. 50 வழைவுகளுக்குள்ளால் வந்து கடைசியில் நமது ஊர் கழிவுநீர் அனைத்தும் அங்குதான் விழுகின்றது. ஆனால் ஒரு வரம்புக்குள்ளால்தான் நீர் போக வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே வேலைக்குரிய மதிப்பீட்டறிக்கையைப் பார்த்து பாணம் கொடுப்பது சிறந்தது என்பது எனது அபிப்பிராயம். அதே நேரம் இந்த வேலைத்திட்டத்திற்கு சமுர்தி நிவாரணம் பெறுபவர்களையும் உள்வாங்கினால் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பிரதேச சபை எல்லைக்குள் அப்பாற்பட்ட விடயங்கள் பற்றி இந்த இடத்தில் நாங்கள் பேசுவதால் எந்தப் பிரயோசனமும் இல்லை. சமுர்தி உத்தியோகத்தர் பற்றியோ, சமுர்த்தி எடுப்பவர் பற்றியோ எங்களுக்கு எந்த விதமான அதிகாரங்களும் இல்லை. ஆனால் கௌரவ தவிசாளர் அவர்களின் முன்மொழிவினை நான் வரவேற்கின்றேன். ஒரு மழை பெய்து வெள்ளம் ஏற்படும் வரை காத்திருக்காமல் ஒரு குறிப்பிட்ட சனசமூக நிலையத்திற்கு குறிப்பிட்ட பகுதியைக் கொடுத்தால் அவர்கள் தொடர்ச்சியாக நீர் வழிந்தோடும் வாய்கால்களையும் வடிகான்களையும் துப்பரவு செய்வது அவர்களுடைய பொறுப்பாகும்.

உதாரணமாக, எனது வட்டாரத்தில் இருக்கின்ற புளக் ‘ஜே‘ ஈஸ்ட் 01,02 பிரதேசத்தில் மிகவும் சிக்கல் நிறைந்த வடிகான் பிரச்சினை கூடிய பிரதேசம். எனவே அங்குள்ள 02 சனசமூக நிலயங்களையும் எனது பொறுப்பில் தந்தால் நானே நேரடியாக நின்று அவர்களை மேற்பார்வை செய்து ஏனைய உத்தியோகத்தரிகளின் உதவியோடு நடைமுறைப்படுத்தலாம் என்று நான் அதனை வரவேற்று முன்மொழிகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதன் எண்ணக்கருவினை உள்வாங்கியிருந்தால் உங்களுக்கு விளங்கியிருக்கும். என்னைப் பொறுத்த வரையில் சமுர்த்தி லாபிகளை வெளியில் கொண்டு வந்து காட்சிப்படுத்தி இந்த வேலைகளைச் செய்வதென்றால் அவர்களுக்கு சமுர்தி கொடுக்காமல் இருக்கலாம். ஏனென்றால் வறுமையினால்தான் அந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இந்த சபையின் நோக்கம் எவ்வாறு நாம் எமது வட்டாரத்தில் உள்ள மக்களை சமுர்தி வறுமை வழியில் இருந்து வெளியில் எடுக்கலாம் என்று நாம் சிந்திக்க வேண்டும். அந்த நோக்கமாகவே இந்த சபை செயற்பட வேண்டும் என்பது எனது அவா.

**தீர்மானம் 06**
மழைகாலம் தொடங்கியுள்ளதால் பிரதான வடிகான்களை துப்பரவு செய்வதற்காக குறித்த பிரதேச சனசமூக நிலயங்களின் பங்கேற்புடன் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 07**
விலங்கறுமனைக்கு சுகாதார கடமைக்காக சமூகமளிக்கும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு வழுங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

கைத்தொழில் வர்தக அமைச்சின் வேண்டு கோளுக்கினங்க 13 வேலைத்திட்டங்களுக்கு பணம் ஒதுக்கீடு செய்து மாகாண திரை சேரிக்கு வந்துள்ளது. அத்தோடு 55,000 ரூபா வீதம் 100 Toilet கட்டுவதற்கும் திரைசேறிக்கு வந்துள்ளது. இவைகளை இந்த மாத காலத்திற்குள் கௌரவ உறுப்பினர்களின் சிபார்சின் படி செயற்படுத்தப்படும்.

**தீர்மானம் 08**
கைத்தொழில் வர்த்தக அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் 13 வேலைத்திட்டங்களை மேற்கொள்ள சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

**வேலைகளின் விபரங்கள்**
01. Const. of Library Building - Stage I - Veeramunai
02. Const. of Jamaliya Mosque Building 1st Floor - Sammanthurai - 12
03. Renovation of Old Market Building Pradeshiya Sabha Sammanthurai - 02
04. Renovation of Mohideen Clock Tower - Hijra Junction - Sammanthurai
05. Painting to Gateway Nallupitty Junction Pradeshiya Sabha Sammanthurai
06. Const. of Janaza Hall (Funeral Hall - Muhallah Muhallah Cemetery - Malayadik Girammam 04
07. Concrete Box Culvert - Sammanthurai Sorikkalmunai Road
08. Concrete drainage with Road - Ampara 14th Road 1st Cross Street
09. Concrete Surfacing road & drainage Noor Mosque Lane Sammanthurai
10. Concrete Surfacing road & drainage Transformer road 1st cross lane in Sennel Giramam - 02
11. Concrete Surfacing to Poonaipallar Road - MajeetPuram Sammanthurai
12. Concrete Surfacing to Mickraj Road Valathapitty – Sammanthurai
13. 100 Toilets with Beneficiary Participation

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்ட 5 மில்லியன், 02 மில்லியன் வேலைகளை உள்ளுராட்சி ஆணையாளயர் அலுவலகத்தினால் அங்கீகாரம் பெறப்பட்டு அனுப்பப்பட்டது. எமது பிரதேசத்திற்குட்பட்ட வேலைகளை கூட்டி எடுப்பதற்குரிய வழிகள் நமது சபையால் முடியாதா? அதற்கு நாம் சபை முடிவெடுத்து அனுப்பிவைக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் ஒரு சட்டப்பிரச்சினை உள்ளது. 2 மில்லியனுக்கு மேல் வேலைகளைத் தரலாம் ஆனால் தருவதில்லை. போன சபையில் நாங்கள் 05 மில்லியனுக்கும் வேலைகள் செய்துள்ளோம். இது 03 வருட காலத்திற்குள் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ்வாறு முடிவெடுத்ததற்குக் காரணம் கடந்த காலங்களில் சபை இல்லாததால் செயலாளரினால் சபையை வழிநடாத்தினார்கள். அவர்களின் தற்போக்கு காரணமாக இதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதால் இத்திட்டத்தினை செயற்படுத்தினார்கள். ஆனால் தற்பொழுது சபை வந்துள்ளது. நிச்சயமாக நாம் அந்த அதிகாரத்தை நமது கைக்குள் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபை முடிவாக எழுதி அனுப்புவோம்.

**தீர்மானம் 09**
46 - 4180 இலக்க Trailer திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**தீர்மானம் 10**
பஸார் 12 வது வீதியின் குறுக்கு வீதியில் கட்டப்பட்ட வடிகானுக்கு Cover Slab அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**தீர்மானம் 11**
கைகாட்டி சந்தியில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவிற்கான பாதுகாப்பு வேலியினை சபை நிதி மூலம் நிர்மானிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 12**

வைத்தியசாலை 7ம் குறுக்கு வீதி வடிகானை திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 13**

கல்லரிச்சல் - 03 தேன்பானை வீதியில் கல்வெட் போடுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அனைத்து கௌரவ உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வது நகரத்திற்குள் உள்ள வீதிகளுக்கு செலவு செய்வதைக் குறைத்து விடுபட்டுள்ள சிறிய வேலைகள் தொடர்பாக அதாவது 10M 30M

க்குட்பட்ட வேலைகளை செய்து முடிக்க வேண்டும். அது தொடர்பான விடயங்களை அடுத்த மாத காலத்திற்குள் நான் உங்களிடம் சமர்ப்பிப்பேன்.

பின்னர் கல்லெரிச்சல் ஏரியா அதாவது அன்வர் இஸ்மாயில் மாவத்தையில் தெற்கே இருக்கின்ற பிரதேசம் அதே போல் சென்னல் கிராமம் 1, 2 போன்ற பிரதேசத்திலும் அதிகமான வேலைகள் உள்ளது. அடுத்த வருடத்திற்குள் சபை ஒரு திட்டமிட்டு ஒவ்வொரு அங்கத்தவர்களும் ஒவ்வொரு வட்டாரத்திற்குள் வருகின்ற வேலைகளை செய்ய வேண்டும். கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், தொழில்நுட்ப உத்தியோத்தர்கள் மூவரும் இணைந்து ஒரு பாதையை சம்பூரணமாக முடிக்க வேண்டும். சரியாக திட்டமிட்டால் இரு பாதைகளை இணைத்து ஒரு ஏரியாவை பூரணமாக முடிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 1ம் குறுக்குத் தெருவில் 03 வது வீதி மிக மோசமாக உள்ளது அதனை பூரணப்படுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நிச்சயமாக அவைகள் செய்யப்படும். செய்து முடித்தவுடன் உங்களது அங்கீகாரத்திற்கு வரும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பழைய அமானா பேங் அருகில் செல்கின்ற வீதியில் பைசிகள், மோட்டார் சைக்கிள் மாத்திரம்தான் போகமுடியும் ஆடோ கூட செல்ல முடியாத வீதி. அதில் பாதையும் போட்டு நடுவில் கானும் கட்டி இடையில் விடுபட்டுள்ளது. அதனையும் செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அல்-மர்ஜான் பாடசாலை பின் வீதியில் உள்ள கல்வெட்டினையும் திருத்தம் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 14**

எமது பிரதேசத்திலுள்ள பாதைகள் அமைக்கப்பட்டு இரு பாதைகளை இணைக்கும் இடைவெளிகளையும், விடுபட்டிருக்கும் மிகுதி வேலைகளை செய்வதற்கும், அதனுடன் தொடர்புபட்ட கல்வெட், வடிகான் என்பவற்றை பூரணப்படுத்துவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 15**

அம்பாரை - 09 ம் வீதி, MP வீதி மற்றும் மல் 10 ம் குறுக்கு வீதிகளில் உள்ள வடிகான்களையும் கல்வெட்டுக்களையும் திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 04 ம் வட்டாரத்தில் ராசா மரைக்கார் அவர்களின் வீட்டுக்கு அருகில் 4 அடி அகலத்தில் 20 அடி நீளத்தில் பாதை உள்ளது. அதனையும் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவைகளைச் செய்யலாம் கௌரவ உறுப்பினர்களின் உதவியுடன் 30, 40 M க்குள் இருக்கின்ற மிகுதி வேலைகளை ஏதாவது ஒரு வகையில் இந்த வருடத்திற்குள் முடிக்கலாம். அவைகளை இணங்கட்டு குறிப்பிடுங்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் சீமெந்து வீதிகளை விரும்பாததற்குக் காரணம் அவ்வீதி போடப்பட்டு 21 நாட்களுக்கு மேற்பட்ட காலத்திற்குப் பிறகுதான் அதன் உறுதித்தன்மை வரும். ஆனால் சீமெந்து போட்டு அதன் பதத்திற்கு வராமல் பாவனைக்கு விட்டவுடன், அவ்வீதி குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு வீதியில் செல்ல முடியாத நிலை உருவாகின்றது. அப்பாதையில் றம்றெக் போன்ற பெரிய வாகனங்கள் சென்று பிறேக் அடித்தவுடன் அவ்விடத்தி உடைந்துவிடுகின்றது.

வீதி மட்டுமல்ல கட்டடங்களும் அவ்வாறே 03 கிழமை போவதற்கு முன் அடுத்த மாடி வேலை செய்கின்றனர். அதனால் அந்தக் கொங்றீட் சரியான நிலைக்கு வருவதில்லை. அதனால் வரும் ஆபத்துக்கள் நமது மக்களுக்கு விளங்குவதில்லை. சில நாடுகளில் கட்டடங்கள் இடிந்து விழுவதற்கும் இதுதான் காரணம்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொங்றீட் போடுவது கொந்தராத்துகாரர்களின் பொறுப்பு மட்டுமல்ல. வீதிகளைக் கொண்டு வரும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகளை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். ஜெய்கா திட்டத்தில் சம்மாந்துறைக்க வீதி கொண்டு வந்ததில் எந்தவித அரசியல் தலையீடும் இல்லாமல் நாங்கள் அந்த வீதியைக் கொண்டு வந்தோம். வேலையை செய்யும் போது உறுப்பினராக இருந்தவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. வேலை முடிந்தவுடன் அது பற்றி விமர்சிக்கின்றனர். காசு கிழக்கு மாகாணத்ததிற்கு மொத்தமாகத்தான் வரும். ஒவ்வொரு ஊருக்கென்று வேறாக வருவதில்லை. அவ்வாறு இருக்கும் போது எமது ஊருக்கு மிகவும் கஸ்ட்டப்பட்டு அந்த வீதியைக் கொண்டுவந்தோம்.

கொங்றீட் வீதியின் தன்மையானது 28 நாட்களுக்குப் பிறகு பரிசோதனை செய்ய வேண்டும். அதன் பிறகுதான் வீதிகளை பாவனைக்கு விட வேண்டும். ஆனால் அதற்கு முன்பே றம்றெக் ஓடினால் எவ்வாறு அவ்வீதி உறுதியாக இருக்கும். நாவிதன் வெளி பிரததேசத்தில் றம்றெக் ஓட முடியாது. ஜெய்கா திட்டத்தில் போடப்பட்ட வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்கல்ல. பைசிகள், மோட்டார்சைக்கில் போன்ற சிறிய வாகனங்கள் மட்டுமே செல்ல முடியும். ஆனால் சம்மாந்துறையில் மாத்திரம் எந்த வீதியிலும் றம்றெக் செல்லலாம். கல்முனை சாய்ந்தமருது, வீரச்சோலை போன்ற ஊர்களில் றம்றெக் எல்லா வீதிகளிலும் செல்ல முடியாது. எனவே ஒவ்வொருவரும் இறுதிக்கட்டத்தில் குறைபாடுகளைக் கூறுவதைவிட ஆரம்பத்தில் அதனைச் சுட்டிக்காட்டியிருந்தால் அவைகளைச் சரியாக செய்திருக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதனை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். அதுமட்டுமல்ல கல்வெட்கள் ஒவ்வொன்றும் உடைவதற்குக்க காரணம் றம்றெக்தான்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எந்த வீதி சரியாக போடப்பட்டது என்று கேட்டால் சபையால் போடுபட்ட வீதிகள் எந்தப்பிழையும் இல்லை நீங்கள் பார்த்தால் விளங்கும். அதனை எவரும் விமர்சிக்க முடியாது. கொந்தராத் காரர்களை குறைகூறுவதற்கில்லை. உதாரணமாக 01 ஆம் குறுக்குத் தெருவில் வீதி போடும் போது கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களின் தந்தை இது பிழையாக போடப்படுகின்றது என்று கூறியும் அவ்வீதி போடப்பட்டது. அதனை பரிசோதித்து சரியானது எனவும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று அவ்வீதியைப் பார்த்தால் உங்களுக்கு விளங்கும். எனவே, இவ்வாறான பிழைகள் இனியும் இடம்பெறாமல் நாம் வீதிகளை செய்ய வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறிய வீதிகள் போடும் போது மல்வத்தை சடயந்தலாவை 02 ம் குறுக்கு வீதியை செய்ய வேண்டும். அதே சந்தர்ப்பத்தில் நாங்களும் கொங்றீட் வீதி போடும் போது, கொங்றீட் போட்டுக் கொண்டிருக்கும் போதே அதற்கு மேலால் நடந்து செல்கின்றனர். அதனால் செல்ல வேண்டாம் என்று கூறினாலும் அதவர்கள் அதனால்தான் செல்வார்கள். இது மக்கள் செய்யும் தவறு. ஆனால் வீதி சேதமடைந்தால் கொந்தராத்துக்காரர்களை பிழை கூறுவார்கள்.

**தீர்மானம் 16**
வளத்தாப்பிட்டி, பாலக்கர ஆறு இரண்டிலும் உள்ள வரவேற்புப் பதாதைகளை திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**தீர்மானம் 17**
மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு மணிக்கூட்டை கொள்வனவு செய்வதற்கான முற்பனத்தை WADS CO நிறுவனத்திற்கு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது பிக்பெல் சத்தத்துடன் இயங்கும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஊரில் சத்தம் கேற்கும். இது மர்ஹூம் ULM. முகைடீன் அவர்களை நினைவு கூறும்.

**தீர்மானம் 18**
அப்துல் மஜீட் மண்டபத்திற்கு Paint பூசுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ உறுப்பினர் எம். ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அப்துல் மஜீட் மண்டபத்திற்கு பெயின்ட் பூசுவதுடன் அதற்கு AC உம் பொருத்த வேண்டும். அவ்வாறு பொருத்தினால் AC, AC இல்லாமல் என்று எமது வருமானத்தைக் கூட்டிக் கொள்ளலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
AC போட முடியாமைக்குக் காரணம் சீலிங் உயரத்தில் உள்ளது. ஏசி பூட்டினால் 50,000 ரூபா மணித்தியாலத்திற்கு வாங்க வேண்டி வரும். ஏனென்றால் அவ்வளவு தூரம் AC Cool ஆவதற்கு நேரம் எடுக்கும். அப்படியானால் போல் சீலிங் அடிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போல் சீலிங் அடித்து அதனை செய்தால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால் நமது ஊரில் அப்துல் மஜீட் மண்டபம் மட்டும்தான் உள்ளது. அதனை சிறப்பாக செய்தால் நமது ஊருக்கும் பெருமை இதனை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மதிப்பீட்டறிக்கை செய்து பார்கலாம். கௌரவ நகர திட்டமிடல் அமைச்சரிடம் முடியுமா என்று கேட்கலாம். அந்தக்காலகட்டத்தில் அப்துல் மஜீட் மண்பம் கட்டும்போது இது வேண்டுமா? என்ற கேள்வியும் எழுந்தது. ஆனால் நேற்று GA அவர்கள் என்னிடம் சம்மாந்துறையில் இவ்வளவு பெரிய மண்டபம் இருக்கென்று எனக்குத் தெரியாது என்று கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு நடைபெற்ற கூட்டத்திற்கு கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறைளயில் மட்டும்தான் கூடுதலான மக்கள் இருக்ககூடிய பெரிய மண்டபம் உள்ளது. இது நமது ஊருக்கு பெருமையான விடயம். எனவே அதனை இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

சென்ற மாத செலவீனம் உங்களுக்கு தரப்பட்டுள்ளது அதில் ஏதாவது சந்தேங்கள் இருந்தால் கேட்கலாம். கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் போன சபையில் பாத்திமா பாலர் பாடசாலைக்கு ஏன் அதிமாக கரன்ட் பில் வந்துள்ளது என்று கேட்டிருந்தீர்கள். அதற்குக் காரணம் அப்பாடசாலையில் வெளவ்வால் தொல்லை காரணமாக இரவு வேளைகளில் ஒரு லைட் போடப்பட்டுள்ளது. அதனால் தான் அக்கட்டனம் கூடுதலாக வந்துள்ளது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது பகுதியில் உறுதிகள் பேமிட்டுக்கள் வந்துள்ளது. ஆனால் அவைகள் இன்னும் மக்களிடம் கைளிக்கப்படாமல் உள்ளது. அவைகளை நாம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது அரசியல் தலையீடு காரணமாக இன்னும் மக்களிடம் கையளிக்கப்படாமல் உள்ளது. அதனை ஒரு விழாவாக வைத்துக் கொடுப்பதற்காக வைத்திருக்கின்றார்கள். நாம் பிரதேச செயலகத்திற்கு சபை கேட்டுக் கொண்டதாக எழுதி அனுப்புவோம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தொலை பேசிக்கட்டணம் அலுவலகத்திற்கு 30,730 ரூபா என காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கூடுதலான தொகை வருவதற்கு காரணம் என்னவென்று கூறினால் நன்றாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்குக் காரணம் இந்த அலுவலகத்தில் மட்டுமல்ல சபையின் அனைத்து பிரிவுகளுக்கும் மற்றும் விளையாட்டுக்கட்டடத் தொகுதி, நூலகங்கள், கொம்போஸ்யாட் போன்ற அனைத்துப் பிரிவுகளுக்கும் அலுவலகத் தொலைபேசியில் இருந்துதான் இணைக்கப்பட்டுள்ளது. 30 Indocom Unit இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சபை உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறே வழங்கப்பட்டுள்ளது. இதற்குக் கட்டணம் இல்லை. அலுவலகத்திற்கும் வெளி இடத்திற்கும் இவைதான் உபயோகிக்கப்படுகின்றது. இது ஒரு பெகேஜ் முறை. அதில் ஒரு மாற்றம் கொண்டு வர வேண்டும். நான் சென்ற கிழமை டெலிகொம் உத்தியோகத்தரிடம் அதனை Mobil ஆக மாற்றலாமா என்று பேசியுள்ளேன். ஒவ்வொரு மாதமும் இந்தக் கட்டணம்தான் செலுத்தப்படும்.

**தீர்மானம் 19**

சென்ற மாதம் 03.09.2018 தொடக்கம் 28.09.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அங்கீகாரம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

## கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள் / பிரேரணைகள்

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது மல்வத்தை உப அலுவலகத்தில் 04 கட்டங்கள் உள்ளது. அதில் ஒரு கட்டடம் புதிதாக அமைக்கப்பட்ட பாலர் பாசாலைக் கட்டடம். அதன் முன் கூரைப்பகுதியில் இடப்பட்ட கைமரங்கள் இறந்து உடைந்ததனால் கூரை முற்று முழுதாக சேதமடைந்துள்ளது. அதனை சீர் செய்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். அக்கட்டடத்தை பாலர் பாடசாலைக் கட்டடமாக உபயோகிக்லாம். தற்போது பாலர் பாடசாலை தகரக் கொட்டிலின் கீழ் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் இயங்கி வருகின்றது. இதனை திருத்தம் செய்வதற்கு 12 இலட்சம் ரூபா மதிப்பீட்டறிக்கை செய்யப்பட்டுள்ளது. எனவே அதனை சபை நிதியில் செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் 20**
மல்வத்தை உப அலுவலக கட்டட கூரையை திருத்தம் செய்வதற்கும், மல்வத்தை வாராந்த சந்தைக்கான தற்காலிக கொட்டில் அமைப்பதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

இவ்வருட சரஸ்வதி பூஜையினை எமது மல்வத்தை சபையில் நடாத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். எமது சபைக்கும், உழியர்களுக்கும் நன்மை கிடைக்க வேண்டும் என்றே இந்தப் பூஜை நடாத்தப்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஏன் மல்வத்தையில் நடாத்த வேண்டும்? இந்த சபை மூவினங்களும் சேர்ந்திருக்கும் சபை. உங்களது மத அனுஸ்ட்டானங்களை இந்த சபைக் கட்டடத்தில் நடாத்துவதற்கு தயக்கம் இருந்தால் நீங்கள் சபை அங்கத்தவராக இருந்திருக்கத் தேவையில்லை.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுக்கு தயக்கம் இல்லை. எவரையும் சங்கடத்திற்குள்ளாக்கக்கூடாது என்பது எனது எதிர்பார்ப்பு.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் ஒரு சங்கடமும் இல்லை. இந்த சபை தமிழ் முஸ்லீம் மக்கள் அனைவரும் இணைந்து உருவாக்கிய சபை. சரஸ்வதி பூஜை மல்வத்தையில் நடாத்தலாம். ஆனால் இங்கு நடாத்த முடியாது என்பதற்காக அங்கு செய்வது நமக்குள் வேற்றுமையைக் காட்டுகின்றது. நாங்கள் பழைய அலுவலகத்தில் இருக்கும் போது ஒருமுறை செய்திருக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதனால் பல விமர்சனங்கள் வரலாம் கௌரவ உப தவிசாளரின் வேண்டுகோளிற்கமைய மல்வத்தையில் நடாத்துவது சிறந்தது. நாங்கள் தவிர்க்க வில்லை. அவரது விருப்பப்படி நடப்பது நல்லம் என்று நினைன்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சரஸ்வதி பூஜை தமிழ் ஊழியர்கள் எந்தக்காரியாலயங்களில் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் இடம்பெறுவது வழக்கம். அப்படியான விடயத்திற்கு நாம் தடையாக இருக்கக்கூடாது. இவ்வாறு அவர் கூறியதற்குக் காரணம் எனக்கு விளங்குகின்றது. அந்த ஊழியர்களுக்கு நமது சபையில் இடம் உள்ளது என்பதனை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்றது. விமர்சனத்தை நாம் கவனத்தில் கொள்ள தேவையில்லை. நாம் நியாயமாக நடக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளரின் விருப்பப்படி அவர் சொன்ன இடத்திலேயே நடாத்துவது சிறந்தது என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது உப தவிசாளர் அவரது மார்க விடயத்தை நமது சபையால் நடாத்துவதற்கு கேட்டதையிட்டு அவர் மதத்தில் வைத்திருக்கின்ற பற்றை நான் பாராட்டுகின்றேன். அதனை சபையில் நடாத்த வேண்டும் என கேட்டுக் கொள்கினறேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் விருப்பம் போல் மல்வத்தையில் நடாத்துங்கள் அனைத்து கொளரவ உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த வருடம் மல்வத்தையில் நடாத்துவோம். அடுத்த வருடம் சுமுகமான முறையில் சபையில் செய்யலாம்.

**தீர்மானம் 21**
இந்து மத ஊழியர்களுக்கு வாணி விழா, சரஸ்வதி பூஜையினை மல்வத்தை சபையில் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம். இன்பவதி |

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற கிழமை சம்மாந்துறை வைத்திய சாலையில் காலை 06 மணி தொடக்கம் இரவு 09 மணி வரை மின்சாரம் தடைப்பட்டுள்ளது. ஜெனரேட்டர் கூட பாவிக்க வில்லை. ETU விலும் மின்சாரம் இயங்கவில்லை. இதற்குக் காரனம் என்னவென்று தெரியவில்லை.

நமது வைத்தியசாலையில் CTC ஸ்கேனர் இருந்தும், அவர்கள் அஸ்ரப் ஞாபகர்த வைத்திய சாலைக்கே அனுப்புகின்றனர். அவ்வைத்திய சாலையில் அங்குள்ள நோயாளிகளைப் பார்து விட்டுத்தான் நமது ஊரில் இருந்து செல்கின்ற நோயாளி கவனிக்கின்றனர். நோயாளி அம்புலான்ஸில் அவசர சிகிச்சைக்குரியவராக இருந்தாலும் அவ்வாறே செய்கின்றனர். எமது ஊர் வைத்தியசாலையில் இருக்கின்ற மெசினுக்கு ஒரு இயக்குனரை நியமித்தால் இவ்வாறான பிரச்சினையை குறைத்துக் கொள்ளலாம். எனவே, சபையூடாக அதனை அறிவிக்கலாம் என நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது வைத்திய சாலையில் ஒரு ஜெனரேட்டர் உள்ளது. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்போது பணம் ஒதுக்கி அதனை பெற்றுக் கொடுத்தேன். ஏதாவது ஒரு பிரச்சினையாக இருந்திருக்கலாம். சபை மூலம் அறிவிப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சவுதி அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 125 Mga Word கெப்பாசிட்டி உடைய ஜெனரேட்டரை நான் தனிப்பட்ட முறையில் முயற்சி செய்து பெற்றுக் கொடுத்தேன். சுனாமியால் பாதிக்கப்படாத ஊராக சம்மாந்துறை இருந்தும் அதனைப் பெற்றுக் கொடுத்தேன். சம்மாந்துறையில் அரவைாசிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கக்கூடிய ஜெனரேட்டர். அது இருந்தும் ஏன் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றது என்பதுதான் விளங்க வில்லை.

அடுத்து இன்னுமொரு சந்தோசமான விடயத்தை நான் இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். மாகாண சபையில் இருக்கின்ற போது மேற்கொண்ட முயற்சியின் காரணமாக தற்போது சம்மாந்துறை வைத்திய சாலையில் Clinic Complex 30 இலட்சம் பெறுமதியன கட்டடம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும். அங்கு வருகின்ற மக்கள் காலை தொடக்கம் மாலை வரை இருப்பதற்கு இடம் இல்லாமலும், மலசலகூட வசதிகள் இல்லாமலும் மிகவும் கஸ்டமான நிலையில் இருந்ததை சுட்டிக்காட்டியும், அதனைக் கொண்டுவந்தோம் என்ற சந்தோசமான செய்தியைக் கூறிக் கொள்வதோடு,

வைத்திய சாலையில் நோயாளர் விடுதியில் ஏற்பட்ட நெருக்கடியை நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கத்திற்கும் சுட்டிக் காட்டியதன் பிரகாரம் மத்திய அரசாங்கத்திலே சுகாதார பிரதி அரமைச்சர் கௌரவ பைசல் காசிம் அவர்கள் ஒரு தற்காலிக ஏற்பாடாக 3 கோடி 08 இலட்சம் செலவில் 40 கட்டில்கள் கொண்ட நோயாளர் விடுதியை கட்டி திறக்கின்ற தருவாயில் உள்ளது. என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சபை ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு சந்தோசமான செய்தி ஒன்றை தாங்கள் மூலம் சபைக்கு அறிவித்தீர்கள் சீனா நாட்டின் நகரை ஒத்த வேலைத்திட்டத்தை நாங்கள் பார்வையிட வேண்டும். தாங்கள் எடுத்த முயற்சி வெற்றியடைந்ததையிட்டு சபை சார்பாக பாராட்டை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சம்மாந்துறையில் பழைய இரும்புகள் விற்கின்ற நாடார் கடைகள் இருக்கின்றது. எங்களது நகரை அண்டிய பிரதேசங்களில் மல்கம்பிட்டி வீதியில் நாடார் கடைகள் அலங்கரிக்கின்றது. கல்முனை வீதியிலும் உள்ளது. பிலாவடி லேனில் ஒரு தனி நபர் இடத்தில் நாடார்கடை அமைக்கப்பட்டுள்ளது. ஒரு தடைவ அவரது பொருட்களை வீதியின் இரு பக்கமும் உள்ள மதிலில் சாய்து வைத்ததனால் விபத்தும் ஏற்பட்டது. தற்போது அந்த வீதியை மிகவும் சிறப்படைய வைத்திருக்கின்றார்கள் எமது கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களும் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களும். எனவே நாடார் கடைகளுக்கென்று நமது ஊரில் ஒரு இடத்தை ஒதுக்கி அதனை அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தாங்கள் எடுத்த திட்டத்தைப் போன்று எங்களது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் ஜப்பான் நகரம் தொடர்பான விடயத்தை முன்வைத்தார். அவரும் அதனை மிக விரைவாக முடிப்பார் என்று நினைக்கின்றேன். அவருக்கும் சபை சார்பாக பாராட்டுகின்றேன்.

ஹிஜ்றா 01 ம் வீதியில் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் கனுக்கள் வீதியை மறுத்த வகையில் இருப்பதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றது. டெலிகொம் நிறுவனத்தினரிடம் கூறி அதனை அப்புறப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, புளக் ‘ஜே‘ மேற்கில் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற சிறுவர் பூங்கா வேலைத்திட்டத்தில் ஒரு கல்வெட் இருக்கின்றது. இதற்கு முன்னர் மழை பெய்யும் காலத்தில் நேரடியாக அந்தக் குளத்தில் விழும் சந்தப்பம் இருந்தது. அதனால் நீர் தேங்கி நிற்கின்ற நிலை காணப்படவில்லை. கால்வாய் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அதிகமான நீர் அந்தக்கால்வாயில்தான் விழுகின்றது. தற்போது அந்த இடத்தில் குழாய் போடப்பட்டுள்ளது. அதன் முன் இருக்கின்ற வடிகானுடைய உள்ளக அளவு 2½ அடி ஆகும். ஆனால் அதற்குப் போடப்பட்டிருக்கும் குளாய் 1½ அடி. ஆகவே, நீர் தேங்கி நிற்கின்ற சந்தர்ப்பம் கூடுதலாக இருக்கின்றது. அதனை மிக அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மேலதிக மின் விரயத்தை தவிர்தலும் ஆபத்துகளில் இருந்து மக்களைப் பாதுகாத்தலும் என்ற தொனிப்பொருளில் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளை எரிய வைப்பதற்கும் அனைய வைப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஆளி மிகவும் ஆபத்தான விதத்தில் பொருத்தப்பட்டுள்ளது. ஆகவே இதற்கு தகுந்த முறையில் மின் ஆளியைப் பொருத்த வேண்டும் என்றும், மின் ஆளிகளைப் பொருத்துவோமாக இருந்தால் மின் விரயத்தையும் பொது மக்களையும் பாதுகாக்க முடியும் என்று கௌரவ தவிசாளர் அவர்களையும் கௌரவ உறுப்பினர்களையும் பணிவாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் இந்த விடயம் தொடர்பாக என்னிடம் கூறியிருந்தீர்கள். இதில் நடைமுறைச்சிக்கல் இருந்தாலும் மக்கள் நடமாடும் பகுதிகளில் வோட்டர் புறுப் உம் மக்கள் நடமாற்றம் இல்லாத பகுதியில் சென்சரும் போட வேண்டும். அனைவரும் லைட் போட்டுக் கேட்கின்றனர். அதனை அனைப்பதற்கு யாரும் வருவதில்லை. இதனால் ஏற்படுகின்ற வீன் விரயங்களை கவனத்தில் எடுத்து அதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி. முஹம்மட் சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபையானது கட்சி பேதங்களுக்கு அப்பால் இன்று மத்திய அரசு போல் மக்கள் நலனில் அக்கரை செலுத்துகின்றது. இந்தச் சூழ்நிலையிலே அண்மையில் கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் அகில இலங்கை மக்கள் காங்ரஸ் உறுப்பினர்கள் அவருடைய அபிவிருத்தி வேலைகயை தடுப்பதாக ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். ஏதாவது அபிவிருத்தியை யார் தடுத்தார் என்பதனை இந்தச் சபையில் கூற வேண்டும். ஊடகம் என்பது பொறுப்புவாய்ந்ததொன்றாகும். அவை கருத்துக்களை வெளிக்கொன்டு வருகின்போது எங்களைப் பாதிப்படையச் செய்கின்றது. அந்தக்காலகட்டத்தில் யார் தடுத்தார் என்றும், அவர் கொண்டு வந்த அபிவிருத்தி வேலைகளையும் இந்த சபையில் குறிப்பிட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்கள் அவ்வாறு கூறியிருந்தால் அது பொருத்தமற்றது. சில வேளை கௌரவ உறுப்பினர் உணர்சிவசப்பட்டு கூறுவதை ஊடகவியளாளர்கள் திரிவு படுத்துவது சகஜம். சுவாரஸ்யமான விடயங்களையே மக்கள் விரும்பிப் படிப்பது வழக்கம். எனவே மக்களின் ஆர்வத்தை தூண்டுவதற்காகவும் திரிவு படுத்திப் போட்டிருக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் கூறிய குற்றச்சாட்டை பொய் என்று கூறிக்கொள்கின்றேன். என்னிடம் அது சம்பந்தமான Recording இருக்கின்றது. தடைசெய்யவில்லை இடைஞ்சல் செய்கின்றார்கள் என்று உத்தியோகத்தர்கள் என்னிடம் முறையிட்டார்கள் என்றே கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாங்கள் ஹிஜ்றா, விளினையடி சந்திகளில் சிக்னல் லைட் போடுவதற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். காரணம் வாகனங்கள் ஒரு கட்டுப்பாட்டுடன் இயங்கும். இல்லாவிட்டால் ஒரு கட்டுப்பாடில்லாமல் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றது. இதற்கு RDA விடம் எழுத்துமூலம் கடிதம் ஒன்றை அனுப்பி ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களால் முன்வைக்கப்பட்ட விடயம் ஏற்கனவே நான் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் கூறியிருக்கின்றேன். அதன் ஆவணங்கள் Chief Engineer காரியாலையத்தில் பரிசீலனைக்காக வைத்திருக்கின்றனர்

தேசிய பாடசாலை, விளினையடி சந்தி சுற்றுவட்டம் ஆகிய இடங்களில் கலர் லைட் நிறுவுவதற்காக அனுப்பியுள்ளேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாடார் கடைகள் விடயமாக நான் சபையில் பேசியிருக்க வேண்டும். வளத்தாப்பிட்டியில் 02 நாடார்கடைகள் எந்தச் சட்டத்தையும் மதிக்காமல் சட்ட விரோதமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதனை வீதியோரங்களில் போடப்பட்டுள்ளதனால் பல பிரச்சினைகளை உருவாக்குகின்றது. இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். அதற்கு அவர்கள் லைசன் எடுக்கவும் இல்லை. RDA வும் கவனத்தில் கவத்தில் கொள்ளவில்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அம்பாரை 01 ம் வீதியில் செங்கட்களை அடுக்கி வைத்து பொலித்தீனால் மூடப்பட்டு நிரந்தரமாக அவ்விடத்திலேயே உள்ளது. அதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அடுத்த கிழமையில் இருந்து அறிவித்தல் கொடுத்துவிட்டு பாதைகள், வடிகான்களில் உள்ள அனைத்து பொருட்களும் அப்புறப்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொண்டு இந்த சபையின் நடவடிக்கைகள் இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.